IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, METTUR

M.C.O.P.No. 32/2020

Deposition of RW 1 witness of Plaintiff/Petitioner/Defendant/Respondent solemnly affirmed by Bench Clerk in OP Section of this court in accordance with the provisions of Oaths Act 1969 (Act 44 of 1969) on 21.03.2025.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | அருண் | **Caste** | : | |
| **S/o** | : | சத்தியமூர்த்தி | **Calling** | : | |
| **Village** | : | | **Religion** | : | |
| **Taluk** | : | | **Age** | : | |

**முதல் விசாரணை :–**

நான் இந்த வழக்கில் 1ஆம் எதிர்மனுதாரர் ஆவேன். என் தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் கண்டுள்ள சங்கதிகளை படித்துப்பார்த்து அவைகள் யாவும் உண்மை என தெரிந்து கையெழுத்து செய்தேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். என்னுடைய அறிவுரையின் பேரில்தான் என்னுடைய வழக்கறிஞரால் அது தயார் செய்யப்பட்டது. பின்வரும் ஆவணங்களை என் தரப்பு சான்று ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்

| S.No. | Date | Documents | Remarks |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | TN 57–J –1588 (INNOVA CAR) ன் பாலிஸி (10.09.2019 to 09.09.2020) | சான்றிட்ட நகல் |
| எ.ம.சா.ஆ.2 | – | TN 57–J –1588 (INNOVA CAR) ன் பாலிஸி (17.05.2018 to 16.05.2019) | சான்றிட்ட நகல் |

மனுவில் கோரியவாறு உத்தரவு வழங்க வணக்கமாய் பிராத்திக்கிறேன்.

**(எ.ம.சா.ஆ.2 மனுதாரர் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)**

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் கடந்த 10 வருடங்களாக மூன்றாம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் நிர்வாக அதிகாரியாக பணிபுரிந்து வருகிறேன். எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் இரண்டும் விபத்தில் சம்மந்தப்பட்ட வாகனத்திற்கு உரியது என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனத்திற்கு காப்பீடு பதிவு செய்யும் போது மேற்படி வாகனத்தை நேரில் ஆய்வு செய்து மேற்படி வாகனம் விபத்தில் ஏதாவது சம்மந்தப்பட்டுள்ளதா என்றும் சரிபார்த்து அதன்பின்தான் காப்பீடு பதிவுசெய்வோம் என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 மற்றும் 2 ஆவணங்களில் விபத்தில் சம்மந்தப்பட்ட TN 57 J 1588 என்ற வாகனத்தை நேரில் பார்வையிட்டதாக குறிப்பு இல்லை

என்றால் சரிதான். மேற்படி வாகனத்திற்கு காப்பீடு செய்யும்போது மேற்படி வாகனத்தின் உரிமையாளரோ அவரது பதிலியோ பதிவு செய்ததாக குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். மேற்படி எ.ம.சா.ஆ.1 மற்றும் எ.ம.சா.ஆ.2 ஆகிய ஆவணங்கள் இரண்டும் எங்கள் நிறுவனத்தின் முகவர் மூலமாக பதிவுசெய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனம் காப்பீடு முடிந்தபின் புதிதாக காப்பீடு எடுக்கும்போது தொடர் நிலையில் இருந்தால்தான் முந்தைய பாலிஸி எண் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். எங்களது முகவர்கள் சில சமயங்களில் வாடிக்கையாளரிடம் காப்பீட்டு தொகையை வாங்கி கொண்டு பின்னிட்டு எங்கள் நிறுவனத்தில் செலுத்துவது உண்டு என்றால் அது பற்றி என்னால் கூற முடியாது. எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 10.09.2019 தேதியன்று காப்பீடு பதிவு செய்தபோது அதற்கு முந்தைய காப்பீட்டை பார்த்தார்களா என்ற விவரம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறு 10.09.2019 தேதியன்று காப்பீடு பதிவு செய்தபோது முந்தைய பாலிஸி எண்.72041231180100000563 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாலிஸி எண்.72041231180100000563 கொண்ட பாலிஸி 10.09.2019 ந்தேதியன்று காலாவதியாகி இருந்திருந்தால் முந்தைய பாலிஸி எண் என்று அதை குறிப்பிடமுடியாது என்றால் சரியல்ல. முந்தைய பாலிஸி 16.05.2019 ந்தேதியன்று முடிந்ததாக ஆவணத்தை உருவாக்கி தாக்கல் செய்துள்ளோம் என்றும் அவ்வாறு முடிந்திருந்தால் முந்தைய பாலிஸி எண் என்று ஒன்று எ.ம.சா.ஆ.1 யில் குறிப்பிட்டிருக்கமாட்டோம் என்றால் சரியல்ல. 16.05.2019 ந்தேதியில் இருந்து 10.09.2019 வரை மேற்படி வாகனத்திற்கு பாலிஸி இருந்ததா அல்லது வேறு நிறுவனத்தில் பாலிஸி பதிவு செய்திருந்தார்களா என்று நாங்கள் சரிபார்க்கவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு வாகனத்தின் உரிமையாளர் மாறும்போது புதியதாக காப்பீடு எடுக்கவேண்டும் என்றால் சரிதான். விபத்தில் தொடர்புடைய வாகனத்திற்கு உரிமை மாற்றம் எப்போது ஏற்பட்டது என்று நான் சரிபார்த்தேனா என்றால் இல்லை. அவ்வாறு உரிமை மாற்றம் ஏற்படும் போது முந்தைய பாலிஸி எண் வராது என்றால் சரியல்ல. முந்தைய பாலிஸி எண் வாகனத்தின் அடிப்படையில்தான் குறிப்பிடப்படும் உரிமையாளரின் அடிப்படையில் குறிப்பிடப்படாது. எதன் அடிப்படையில் பெயர் மாற்றம் ஏற்பட்டது என்று எ.ம.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணங்களை சரிபார்த்ததாகவும் குறிப்புகள் இல்லை என்றால் சரிதான். எ.ம.சா.ஆ.2 ஆவணம் இந்த வழக்கிற்காக உருவாக்கப்பட்டதால்தான் தவறான தகவல்களை நான் கூறுகிறேன் என்றால சரியல்ல. மேற்படி வாகனத்திற்கான காப்பீட்டுத் தொகை எங்கள் நிறுவனத்தின் முகவரிடம் காப்பீடு தேதி முடிவதற்கு முன்னதாகவே வாகனத்தின் உரிமையாளரால் கொடுக்கப்பட்டுவிட்டது என்றும் எங்களது முகவர் மேற்படி தொகையை

காலதாமதமாக நிறுவனத்தில் செலுத்தி காப்பீடுஆவணம் ஏற்படுத்தியுள்ளார் என்றும் காப்பீடு அடிப்படையில் இழப்பீடு வழங்குவதை தவிர்க்கும் நோக்கத்தோடு எ.ம.சா.,ஆ.2 ஆவணம் தயாரிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்களது முகவர் உரிய காலத்தில் தொகையை செலுத்தாமல் இருந்திருந்தால் அதனால் ஏற்படக்கூடிய இழப்புகளை நாங்கள் பகர பொறுப்பின் அடிப்படையில் எங்கள் நிறுவனம் செலுத்த கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மேற்படி வாகனம் காப்பீடு செய்யப்படவில்லை என்று நான் சொல்வது தவறு என்றும் அதற்கு முன்பே காப்பீடு தொகை எங்கள் முகவரால் பெறப்பட்ட நிலையில் முந்தைய பாலிஸி எண் என்ற ஒன்றை பாலிஸியில் போட்டு பின்னிட்ட தேதியில் கொடுத்திருப்பதால் நாங்கள் எங்கள் பொறுப்புகளில் இருந்து தவிர்க்க இயலாது என்றும் நாங்கள் நஷ்டஈடு கொடுக்க கடமைப்பட்டவர்கள் என்றும் சொன்னால் சரியல்ல.

ஒம்/– அருண்

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–எல்.கமலகண்ணன்,
சார்பு நீதிபதி,
மேட்டூர்.